DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

STC-6/2025

Prosecution witness – PW 1

| | | |
|---|---|---|
| Name | : திரு.ஹபிஜுல்லா | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(A1 to A5 present.)

07.03.2026 – 12.15 PM

முதல் விசாரணை:–

1. நான் வாலிநோக்கம் கிராமத்தில் குடியிருந்து மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது உறவினர் ஆவார். பட்டியல் சாட்சி – 1 ரகுமத்துல்லா எனது தந்தை ஆவார். அவர் இறந்து 10 நாட்கள் ஆகிறது. பட்டியல் சாட்சிகள் 3 ஸம்கித் எனது தங்கை ஆவார்.

2. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் சம்பவத்தை பார்க்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் விபரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அந்த புகாரில் உள்ள கையொப்பம் எனது அப்பா உடையது தான். எனது அப்பா எதற்காக இந்த புகார் கொடுத்தார் என்று எனக்கு எதுவும் தெரியாது..போலீசார் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் மேற்சொன்ன தகவல்களை தான் சொன்னேன்.

பிறழ் சாட்சி:–

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –**

எதிரிகளும், நாங்களும் ரத்தச்சொந்தங்கள் என்றால் சரிதான். எதிரிக்கும் எங்களுக்கும் இடையே முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. கடந்த

16.10.2021ம் தேதி மாலை 04.00 மணியளவில் எதிரிகள் முகமது ரியாஸ், அப்துல்புகாரி, முகமது முதைபா, உம்முல்சரிபா, ஹக்குல்லா ஆகியோர்கள் சட்ட விரோதமாக ஒன்று கூடி எங்களுக்கு சொந்தமான தென்னைமரத்தில் உள்ள தேங்காய்களை பறித்து விட்டனர் என்றால் சரியல்ல. மேலும் 5வது எதிரி ஹக்குல்லா எனது அப்பா, எனது தங்கை, மற்றும் என்னை பார்த்து நான் உங்களை எல்லாம் மொட்டை கட்டை ஆக்காமல் விடமாட்டேன் என்று அருவருப்பான வார்த்தைகளால் பேசியதாகவும், ஆகவே மேற்படி சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி 26.10.2021ம் தேதியன்று இரவு 08.00 மணியளவில் எனதுஅப்பா ரகுமத்துல்லா வாலிநோக்கம் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தார். இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியும் என போலீசார் விசாரணையின் போது வாக்குமூலம் கொடுத்து விட்டு தற்போது எங்கள் நெருங்கிய உறவினர்கள் என்பதாலும், அவர்களுடன் சமாதானம் ஆகிவிட்டதாலும் எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.07 18:33:58 +0530